

# வீட்டுவசதி மற்றும்
# நகர்ப்புற வளர்ச்சித் துறை

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

மானியக் கோரிக்கை எண் – 26

## அறிவிப்புகள் 2023 – 2024

**பி.கே.சேகர்பாபு**
இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023



## கலைஞர் உருவாக்கிய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு முதலமைச்சராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1971ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தை உருவாக்கினார்கள். சென்னைப் பெருநகரின் வளர்ச்சி, முறையாகவும், ஒழுங்காகவும், வரைமுறைக்கு உட்பட்டும் அமைய வேண்டும் என்பதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் என்னும் பேரமைப்பினை ஒரு சட்டபூர்வ அமைப்பாக 1975ஆம் ஆண்டில் ஏற்படுத்தியதும் கலைஞர் அவர்களே.



# வீட்டுவசதி மற்றும்
# நகர்ப்புற வளர்ச்சித் துறை

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

மானியக் கோரிக்கை எண் – 26

## அறிவிப்புகள் 2023 – 2024


**பி.கே.சேகர்பாபு**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023


MOFUSSIL BUS TERMINUS

## 1. தற்போது கட்டப்பட்டுவரும் குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையம் சர்வதேச தரத்திற்கு ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும்.

திருமழிசை அருகில் குத்தம்பாக்கத்தில் மேற்கு நோக்கிச் செல்லும் கர்நாடகா மற்றும் ஆந்திரப் பேருந்துகளுக்காகக் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தைச், சர்வதேச தரத்தில், கூடுதல் தளப்பரப்பு மற்றும் குளிரூட்டும் வசதியுடன் பிரதான முனையக் கட்டிடம், ரூபாய் 60 கோடி கூடுதல் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 2. திருவொற்றியூரில் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் வடசென்னை மக்களுக்குப் பயன்படும் வகையில் சுமார் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை மேம்படுத்தப்படும்.

சென்னை எண்ணூர் நெடுஞ்சாலையை ஒட்டி, திருவொற்றியூர் முதல் பாரதியார் நகர் வரை சுமார் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை, ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டு, வடசென்னை மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.


56
Buckingham Canal Rd
Buckingham Canal Rd

## 3. சாத்தாங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகம் ரூபாய் 33.35 கோடி மதிப்பீட்டில் நவீன மயமாக்கப்படும்.

எண்ணூர் விரைவுச் சாலை அருகில் சாத்தாங்காடு பகுதியில் 203 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகம் ரூபாய் 33.35 கோடி மதிப்பீட்டில் நவீன மயமாக்கப்படும்.

இதில் மழைநீர் கால்வாய் அமைப்பைப் புதுப்பித்தல், 150 டன் திறன் கொண்ட மின்னனு எடை மேடை, நவீன கண்காணிப்புக் கருவிகளுடன் கூடிய கட்டுப்பாட்டு அறை, அங்காடி நிர்வாகக் குழுவிற்கான தனி வலைத்தளம், பொது வசதியுடன் கூடிய புதிய உணவகம், பொதுப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட அனைத்துப் பகுதி களிலும் மற்றும் அங்காடி வளாகத்தின் எல்லையைச் சுற்றிலும் பூங்காக்கள் மற்றும் பசுமைப்பட்டை, மின்னனுக் காட்சிப் பலகை, புதிய பேருந்து நிழற்குடை மற்றும் முதலுதவி மையம் அமைத்தல் ஆகிய பணிகள் அடங்கும்.



### 4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மாதவரம் சரக்குந்து முனையத்தில் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூபாய் 30.30 கோடி நிதியை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மாதவரத்தில் 80 ஏக்கர் நிலப்பரப்பில் பேருந்து மற்றும் சரக்குந்து முனையம் அமைக்கப்பட்டது. இம்முனையத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பொது வசதிகளான சாலைகள், மழை நீர் கால்வாய், கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்றவற்றை மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூபாய் 30.30 கோடி நிதியுதவி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வழங்கப்படும்.



## 5. சென்னை வெளிவட்டச் சாலையை ஒட்டி, வரதராஜபுரத்தில், ஒப்பந்தப் பேருந்துகள் நிறுத்துமிடம் ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்திலிருந்து ஒப்பந்தப் பேருந்துகள் இயக்குவதற்கு வசதியாக, வெளிவட்டச் சாலையை ஒட்டி, வரதராஜபுரத்தில், ஒப்பந்தப் பேருந்துகள் நிறுத்துமிடம் ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 6. கிழக்குக் கடற்கரையில் நீலாங்கரை முதல் அக்கரை வரை, முதற்கட்டமாக சுமார் 5 கி.மீ நீளத்திற்கு மிதிவண்டிப்பாதை மற்றும் நடைபாதை, ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னைப் பெருநகரப் பகுதியில், கிழக்குக் கடற்கரையில் நீலாங்கரை முதல் அக்கரை வரை, முதற்கட்டமாக சுமார் 5 கி.மீ நீளத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தும் வண்ணம் மிதிவண்டிப்பாதை மற்றும் நடைபாதை, ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.


மழைநீர் வடிகால்

## 7. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து ஊரப்பாக்கம் ஏரி வரை, ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்படும்.

கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தின் வசதியை மேம்படுத்தும் பொருட்டு, இப்பேருந்து முனையத்திலிருந்து ஊரப்பாக்கம் ஏரி வரை, ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 8. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் மருத்துவ சிகிச்சை மையத்துடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில், 7 ஏக்கரில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கான பூங்கா, 24 மணி நேர ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அறை, சூரிய ஒளி மின்சாரக் கட்டமைப்பு, அங்காடி நிர்வாகக் குழுவிற்கான தனி வலைத்தளம், அங்காடி வளாகத்திற்கு வரும் மக்கள் பயன்பாட்டிற்கு மருத்துவ சிகிச்சை மையம் ஆகிய வசதிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 9. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தினுள், 6 ஏக்கரில், ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படும்.

கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தில், 6 ஏக்கரில், ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.


கிளாம்பாக்கம் பேருந்து முனையம்
ஜி.எஸ்.டி. சாலை
அய்யஞ்சேரி - மீனாட்சிபுரம் சாலை

## 10. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள அயனஞ்சேரி - மீனாட்சிபுரம் சாலையினை ரூபாய் 7.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்.

கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திற்கான போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் பொருட்டு, இப்பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள அயனஞ்சேரி – மீனாட்சிபுரம் சாலை, ரூபாய் 7.5 கோடி மதிப்பீட்டில், 60 அடி சாலையாக அகலப்படுத்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 11. சென்னையிலுள்ள நான்கு மேம்பாலங்களின் கீழ் உள்ள இடங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அழகு படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து, வில்லிவாக்கம், இரட்டை ஏரி, பாடி, மற்றும் வடபழனி மேம்பாலங்களுக்கு கீழ் உள்ள இடங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அழகு படுத்தப்படும்.



## 12. சிறுசேரியில் அமைந்துள்ள 50 ஏக்கர் வன நிலத்தில், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வனம் ஏற்படுத்தப்படும்.

சிறுசேரியில் அமைந்துள்ள 50 ஏக்கர் வன நிலத்தில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், தமிழ்நாடு பசுமை கால நிலை நிறுவனத்துடன் (TNGCC) இணைந்து, ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வனம் ஏற்படுத்தப்படும்.



## 13. சென்னை வெளிவட்டச் சாலையில் 4 உடற்பயிற்சிப் பூங்காக்கள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படும்.


சென்னை வெளிவட்டச் சாலையின் கிழக்குப் பகுதியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வசமுள்ள 50 மீட்டர் அகலமுள்ள நிலப்பரப்பில், மீஞ்சூர், வெள்ளனூர், திருநாகேஸ்வரம் மற்றும் முடிச்சூர் ஆகிய இடங்களில், அருகாமையில் வசிக்கும் மக்களின் நலனுக்காக, 4 உடற்பயிற்சிப் பூங்காக்கள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படும்.


NEW MOFUSSIL BUS TERMINUS
புதிய புறநகர் பேருந்து நிலையம்



**14. கிளாம்பாக்கத்தில் ரூபாய் 393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம், ஜுன் மாதத்தில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' எனும் பெயரில் மக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்.**

கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைச் சீரமைக்கும் பொருட்டு கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் நிலத்தில் ரூபாய் 393.74 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம், ஜுன் மாதத்தில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' எனும் பெயரில் மக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்.


FACILITIES TO USERS OF ONLINE PERMISSION PORTAL APPLICATION (PPA)
CMDA Launches its Online Grievance Redressal System
To Build Transperancy & Trust with people of Chennai CMDA has now set up a sustem of Monitor and resolve grievances on Social media and E-mails.
For any Clarification/ Grievance/ Complaint regarding Building rule violation peole can share the following details
Name & Address
Site Address of Property In Violation
Name of the Road Abutting the property
Type & Usage of the Building
Help Desk
Facilitation Centre
Online Grievance Redressal System
For Online Appoinment
7200213536
7200213537
9150064456
9150064457
Chennai Metropolitan Development Authority
CMDA_official
Chennai Metropolitan Development Authority
cmdaofficial
SOCIAL MEDIA PLATFORMS _CMDA
officialcmda@gmail.com
onlinequeries.cmda@gmail.com
Chennai Metropolitan Development Authority
Government Of Tamil Nadu
cMDA

## 15. சென்னைப் பெருநகரப் பகுதியில், மனைப்பிரிவுகளுக்கான திட்ட அனுமதி, இணைய வழியாக வழங்கப்படும்.

சென்னைப் பெருநகரப் பகுதியில் கட்டப்படும் கட்டடங்களுக்கு, 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதல் திட்ட அனுமதி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இணைய வழியாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வசதி, மனைப் பிரிவுகளுக்கான திட்ட அனுமதி வழங்குவதற்கும் இவ்வாண்டில் விரிவுபடுத்தப்படும்.





## Development Rights Certificate

Office of the Member Secretary,
Chennai Metropolitan Development Authority,
Egmore, Chennai-600 008.

I ............................... Member Secretary, Chennai Metropolitan Development Authority having its office at Thalamuthu- Natarajan Building, No.1, Gandhi Irwin Road, Egmore, Chennai-600 008, certify that the persons named hereunder in this certificate is / are the Registered Holders of the DRC issued subject to the provisions of the Development Regulations No.9 [read with the regulations for TDR given in Annexure - XXI and the guidelines approved by the Authority] which formed part of the Second Master Plan for Chennai Metropolitan Area approved under the provisions of the Tamil Nadu Town & Country Planning Act, 1971.

i. Location and details of the land surrendered ..............................................................................
..............................................................................

ii Reservation as per the Master Plan / DDP or ..............................................................................
..............................................................................

2. The DRC can be utilised only in the areas notified for the purpose and subject to the conditions contained in the DR.

i) Certificate No. ............................

ii) Names of the DRC Holders

..............................................
..............................................
..............................................

iii) Extent of the land eligible for the FSI credit......................

Given under the common seal ............................ day of ........................ Year ..............

Senior Planner / Chief Planner,
Area Plans Unit,
CMDA

Member Secretary
CMDA

## 16. சென்னைப் பெருநகரப் பகுதியிலுள்ள பாரம்பரிய கட்டடங்களைப் (Heritage Buildings) பாதுகாப்பதற்காக மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

சென்னைப் பெருநகரப் பகுதியில் அமைந்துள்ள பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அக்கட்டடங்கள் அமையப்பெற்றுள்ள நிலங்களில் அபிவிருத்தி செய்தல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஈடு செய்யும் பொருட்டு, சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.


PETRON


## 17. சென்னை சேத்துப்பட்டில் உள்ள சலவைக் கூடத்தினை, ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்.

சென்னை சேத்துப்பட்டில் 1.76 ஏக்கர் பரப்பளவில் 103 குடியிருப்புகளுடன் அமைந்துள்ள சலவைக்கூடத்தில், புதிய கட்டடங்கள் அமைத்தல், கழிப்பறைகள் அமைத்தல் உள்ளிட்ட அம்சங்களுடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்.



## 18. இராயபுரம் மூலகொத்தளத்தில், ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைத்தல்.

இராயபுரத்தில் மூலகொத்தளம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள சுமார் 15 கிரவுண்ட் பொது இடத்தில், சமுதாயக்கூடம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 19. கோடம்பாக்கத்தில் உள்ள 1.5 கி.மீ. நீளமுள்ள புலியூர் கால்வாய் கரைகள், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்.

கோடம்பாக்கத்தில் உள்ள 1.5 கி.மீ. நீளமுள்ள புலியூர் கால்வாய் கரைகளில், நடைபாதைகள், பூங்கா மற்றும் நீரூற்றுகளுடன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்.



## 20. சென்னையில் கொண்டித்தோப்பு பகுதியில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம் (dialysis centre) அமைக்கப்படும்.

சென்னையில் கொண்டித்தோப்பு பகுதியில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் அமைக்கப்படும். இதில், மாற்றுத் திறனாளிகளுக்கான சிகிச்சை, இயன்முறை சிகிச்சை (Physiotherapy) மற்றும் அவர்களுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் ஆகியவை ஏற்படுத்தித் தரப்படும்.

மேலும், இரத்த சுத்திகரிப்பு மையம் (Dialysis Centre) அமைக்கப்பட்டு மக்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்படும்.



## 21. சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்காவை ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்.

சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்கா, சுற்றுச்சுவர், பார்வையாளர் மாடம், பயிற்சி ஆடுகளம் மற்றும் விளையாட்டு அரங்கம் போன்ற வசதிகளுடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 22. அண்ணா சாலை - டேம்ஸ் சாலை - ஜெனரல் பேட்டர்ஸ் சாலை சந்திப்பில் நடை மேம்பாலம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் அமைத்தல்.

அண்ணா சாலை – டேம்ஸ் சாலை – ஜெனரல் பேட்டர்ஸ் சாலை சந்திப்பில் அண்ணா சாலையைப் பொதுமக்கள் எளிதாகக் கடக்கும் வண்ணம் ஒரு நடை மேம்பாலம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 23. சென்னை மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் கோவில் அருகிலுள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில், ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்.

சென்னை மயிலாப்பூரில் முண்டகக்கண்ணி அம்மன் கோவில் அருகிலுள்ள சுமார் 0.50 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில், பல்வேறு விளையாட்டுக்கான உட்புற பயிற்சி அளிக்கும் வகையிலும், உட்புற பூப்பந்து மற்றும் கூடைப்பந்து விளையாட்டு வசதியுடன் பொது மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் உள் விளையாட்டு அரங்கம் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.




## 24. சென்னை கோட்டூரில் அமைந்துள்ள மாநகராட்சி விளையாட்டுத்திடல் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

சென்னை கோட்டூர் ஏரிக்கரை சாலையில் 1 ஏக்கரில் உள்ள விளையாட்டு மைதானம், நடைபயிற்சிப் பாதை, உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் ஓடுதளத்துடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 25. சென்னை தியாகராய நகர் சோமசுந்தரம் விளையாட்டு மைதானத்தை ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்.

சென்னை தியாகராய நகரில் சுமார் 4.6 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம், ஓடுதளம், திறந்தவெளி உடற்பயிற்சி வளாகம், யோகா பயிற்சி வளாகம், கிரிக்கெட் பயிற்சி தளம் போன்ற வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 26. சென்னை ஷெனாய் நகரில் 4.5 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

சென்னை ஷெனாய் நகரில் 4.5 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம் (திரு.வி.க. மேல்நிலைப் பள்ளி அருகில்), திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்துடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



**27. சென்னை கோயம்பேட்டில் உள்ள சாலை சந்திப்பில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் இயற்கை வனப்புடன் பூங்கா அமைக்கப்படும்.**

சென்னை கோயம்பேட்டில் உள்வட்டச் சாலை மற்றும் சென்னை – பூவிருந்தவல்லி சாலையின் சந்திப்பை அழகுபடுத்தும் பொருட்டு, ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் இயற்கை வனப்புடன் கூடிய பூங்கா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 28. வடசென்னை காசிமேட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

வடசென்னை காசிமேட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழலுக்கேற்ப, வடசென்னை மக்கள் பயன்பெறும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.


தமிழ் வாழ்க

## 29. தண்டையார்பேட்டை பேருந்து பணிமனை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

தண்டையார்பேட்டையில், 6.67 ஏக்கரில் உள்ள பேருந்து பணிமனை, நவீன வசதிகளுடன் பல மாநகரப் பேருந்து வழித்தடங்களும் அடங்கிய பேருந்து நிலையமாகவும் மற்றும் பணிமனையாகவும் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நவீனமயமாக்கப்படும்.


BUS

## 30. கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

கவியரசு கண்ணதாசன் நகரில் 1.40 ஏக்கரில் உள்ள பேருந்து நிலையம் நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 31. பெரம்பூர் - முல்லைநகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

பெரம்பூர் முல்லை நகரில் 1.60 ஏக்கரில் உள்ள பேருந்து நிலையம் நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 32. வியாசர்பாடி கன்னிகாபுரம் விளையாட்டுத்திடல் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

வியாசர்பாடி கன்னிகாபுரம் பகுதியில் தற்போதுள்ள விளையாட்டுத்திடல், ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் பார்வையாளர்கள் அரங்கம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 33. அண்ணாநகர் மேற்குப் பகுதியில், 100 அடி பிரதான சாலையில், நகரும் மின்படிக்கட்டுகளுடன் நடைமேம்பாலம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அண்ணாநகர் மேற்குப் பகுதியில், 100 அடிசாலையில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கு அருகில் பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் சாலையை எளிதாகக் கடக்கும் வண்ணம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நகரும் மின்படிக்கட்டுகளுடன் நடைமேம்பாலம் அமைக்கப்படும்.



## 34. கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில் நவீன சந்தை ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அமைத்தல்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கொளத்தூரில் பேப்பர்மில்ஸ் சாலைப்பகுதியில் உள்ள 1 ஏக்கர் நிலத்தில், ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன சந்தை ஒன்று அமைக்கப்படும்.



## 35. திரு.வி.க. நகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

திரு.வி.க. நகர் பேருந்து நிலையம், பேருந்து நிலையக் கட்டிடத்தைப் புதுப்பித்தல், பொதுக்கழிப்பிட வசதி, காத்திருப்புக் கூடம், கம்பியில்லா இணைய வசதி (Wi-Fi), சூரிய மின்சக்தி தகடுகள், தண்ணீர் சுத்திகரிப்பு அமைப்புகள், பயணியருக்கான இருக்கை, ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான ஓய்வறை உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நவீனமயமாக்கப்படும்.



## 36. பெரியார் நகர் பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

பெரியார் நகர் பேருந்து நிலையம், பேருந்து நிலையக் கட்டிடத்தைப் புதுப்பித்தல், பொதுக்கழிப்பிட வசதி, காத்திருப்புக் கூடம், கம்பியில்லா இணைய வசதி (Wi-Fi), சூரிய மின்சக்தி தகடுகள், தண்ணீர் சுத்திகரிப்பு அமைப்புகள், பயணியருக்கான இருக்கை, ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான ஓய்வறை உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நவீனமயமாக்கப்படும்.



## 37. இராமாபுரத்தில் 1.4 ஏக்கர் திறந்தவெளி நிலத்தில், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படும்.

இராமாபுரம் டி.எல்.எப்-ற்கு எதிரே 1.4 ஏக்கரில் உள்ள திறந்தவெளி நிலத்தில் சுற்றுச்சுவர் அமைத்து, நடைபாதை, புல்தரை, நீரூற்று மற்றும் குழந்தைகள் விளையாட்டு சாதனங்கள் உள்ளிட்ட வசதிகளுடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படும்.


ATC

## 38. எண்ணூரில் அமைந்துள்ள தினசரி காய்கறி சந்தை மற்றும் சமுதாயக்கூடம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

எண்ணூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் 1 ஏக்கரில் அமைந்துள்ள தினசரி காய்கறி சந்தை மற்றும் சமுதாயக்கூடம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் புதுப்பிக்கப்படும்.



## 39. ஆவடி, அன்னனூர் கோணம்பேடு பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் புதிய பள்ளிக் கட்டிடம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஆவடி, அன்னனூர் கோணம்பேடு பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 1.25 ஏக்கர் பரப்பளவில் உள்ள பயன்பாட்டில் இல்லாத கட்டிடத்தை அகற்றிவிட்டு, உயர் வசதிகளுடன் வகுப்பறை, நூலகம் மற்றும் கழிப்பறை வசதியுடன் கூடிய புதிய பள்ளிக் கட்டிடம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 40. அம்பத்தூர் பேருந்து நிலையம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

3.5 ஏக்கரில் உள்ள அம்பத்தூர் பேருந்து நிலையம் மற்றும் பணிமனையில், போக்குவரத்து ஊழியர்களுக்கான ஓய்வறை, கழிப்பறை, கண்காணிப்பு கேமரா, மற்றும் இருசக்கர வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.



## 41. பூவிருந்தவல்லி - ஆவடி நெடுஞ்சாலையில், ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

பூவிருந்தவல்லி – ஆவடி நெடுஞ்சாலையில், கரையான்சாவடி அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளிக்கு அருகிலுள்ள 2.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட மைதானத்தில், பல்வேறு விளையாட்டுகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் தடகள ஓடுபாதை மற்றும் கால்பந்து மைதானம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 42. புழல் மகாலட்சுமி நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய பள்ளி வளாகம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைத்தல்.

புழல் மகாலட்சுமி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்தினுள் 1 ஏக்கர் பரப்பளவில் உள்ள பழைய கட்டிடத்தை அகற்றிவிட்டு, புதிய வகுப்பறைகள், சமையல் கூடம் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய புதிய பள்ளி வளாகம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 43. புழல் மேட்டுப்பாளையம், சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தை ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

புழல் மேட்டுப்பாளையம், சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தில், மேற்கூரையை சீரமைத்து உடற்பயிற்சிக் கூடம் மற்றும் மின்விளக்கு வசதிகள் ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் புனரமைக்கப்படும்.



## 44. முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள இரங்கா நகர் குளம், ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள இரங்கா நகர் குளத்தினை, ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்தி, கரையினை உயர்த்தி, நடைபாதை அமைக்கப்படும்.



## 45. முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள சீக்கனான் ஏரி, ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் அமைந்துள்ள சீக்கனான் ஏரியை, ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்தி, கரையினை உயர்த்தி, நடைபாதை அமைக்கப்படும்.



## 46. பம்மல் கிராமம் ஈஸ்வரி நகரில் விளையாட்டுத் திடல் மற்றும் பூங்கா ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தாம்பரம் நகராட்சி, பல்லாவரம் வட்டம், பம்மல் கிராமம் ஈஸ்வரி நகரில் சுற்றுச்சுவர் அமைத்து, பூப்பந்தாட்டத் திடல், விளையாட்டு மைதானம் மற்றும் பூங்கா ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.


சமுதாயக்கூடம்
301

## 47. ஆலந்தூர் புது தெருவில் சமுதாய நலக்கூடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

ஆலந்தூர் கோட்டம் 160, மண்டலம் 12 இல் உள்ள புது தெருவில் குளிரூட்டு வசதியுடன் கூடிய நிகழ்ச்சி அரங்கம், உணவுக் கூடம் போன்றவற்றைக் கொண்ட சமுதாய நலக்கூடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்படுத்தப்படும்.



## 48. வேளச்சேரியில் அமைந்துள்ள மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதி, ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்.

வேளச்சேரியில் 100 அடி புறவழிச் சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதி, ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அழகுபடுத்தப்படும்.



## 49. பெரும்பாக்கத்தில் ரூபாய் 3.25 கோடி மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கப்படும்.

பெரும்பாக்கம், சேரன் நகர், சரஸ்வதி ராஜசேகரன் சாலையில் உள்ள 2.20 ஏக்கரில், சுற்றுச்சுவர், நடைபாதை, உடற்பயிற்சி மற்றும் குழந்தைகள் விளையாட்டு சாதனங்கள் ஆகிய வசதிகளுடன் ரூபாய் 3.25 கோடியில் ஒரு புதிய பூங்கா சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.



## 50. சென்னை புரசைவாக்கத்தில் (கான்ரான் ஸ்மித் சாலை) உள்ள சலவைக்கூடத்தில், ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்.

சென்னை புரசைவாக்கத்தில் (கான்ரான் ஸ்மித் சாலை) அமைந்துள்ள சலவைக் கூடத்தில், பழைய கட்டடங்களைப் புதுப்பித்தல், ஓய்வறை, கழிப்பறைகள் அமைத்தல் உள்ளிட்ட அம்சங்களுடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மறுவளர்ச்சி மேற்கொள்ளப்படும்.

## குறிப்பு

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## குறிப்பு

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

## குறிப்பு

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................


60



## எங்களின் தொலைநோக்குப் பார்வை

நீடித்த நிலையான சுற்றுச் சூழலை உருவாக்குதல், பொருளாதாரத்தில் மேம்பாட்டினைக் கொண்டதும், தொழில்நுட்பத் திறனில் புதுமையினைக் கொண்டதுமான நிர்வாகக் கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்கள் மூலம், சென்னைப் பெருநகரப் பகுதியில் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்துதலை உறுதி செய்வதும், மக்கள் நல நிர்வாகத்தினைக் கொடுப்பதுமே இக்குழுமத்தின் தொலைநோக்குப் பார்வையாகும்.